ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2125/45 - 2019 මැයි මස 29 වැනි බදාදා - 2019.05.29

*2125/45 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, களியாட்ட வரி (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தில் வெளிப்படுத்தப்பட்ட களியாட்ட நடவடிக்கைகளுக்காக அறவிடப்படும் நுழைவுக் கட்டணத்தில் 15% த்தினை களியாட்ட வரியாக விதித்து அறவிடுவதற்கும் எவ்வாறாயினும், அவ்வாறான காட்சிப்படுத்தல்கள் ஹோமாகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சினிமா கொட்டகைகளில் காட்சிப்படுத்தப்படும் காட்சிகளாயின் நுழைவுக் கட்டணத்தில் 10% த்தினை களியாட்ட வரியாக விதித்து அறவிடுவதற்கும் 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஹோமாகம பிரதேச சபையில் 2018.07.19 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை, நீதி மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் எரிசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சருமான இசுரதேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந் தன்மை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

இசுர தேவப்பிரிய,<br>
முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை,<br>
நீதி மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,<br>
பொருளாதார அபிவிருத்தி, மின் சக்தி மற்றும் எரி சக்தி, சுற்றாடல்<br>
அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு<br>
மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்.

இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,<br>
பத்தரமுல்லை,<br>
*2019, ஏப்பிறல் 18.*

*06-315*

1A - PG 4534 — 89 (2019/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மேல் மாகாண மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, விநோத வரி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட விநோத விடயங்களுக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய வரியின் விகிதம் கீழே உப அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள விதத்தில் விதித்து 2019, 2020 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடுவதற்காக 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய கொழும்பு மாநகர சபை 2018.10.29 ஆந் திகதியில் அங்கீகரித்துக்கொண்டுள்ள பிரேரணையை, மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம், பொருளாதார மேம்பாடு, மின்வலு மற்றும் எரி சக்தி, சுற்றாடல் விவகாரங்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரான இசுர தேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந் தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு கிடைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அங்கீகரித்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*இசுர தேவப்பிரிய,*
*முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை,*
*நீதி மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,*
*பொருளாதார அபிவிருத்தி, மின் சக்தி மற்றும் எரி சக்தி, சுற்றாடல்*
*அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு*
*மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்.*

*இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, ஏப்பிறல் 18.*

*06-316*

---

**மேல் மாகாண மாகாண சபை**

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பொழுதுபோக்கு வரி (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பொழுதுபோக்கு நடவடிக்கைகளிலிருந்து 7.5% நுழைவுக் கட்டணத்தை விதிக்க மற்றும் வசூலிக்க வேண்டும் எனவும், 1946 ஆம் ஆண்டின் பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவின் விதிமுறைகளின்படி சீதாவக்க பிரதேச சபையால் 2018.10.10 ஆந் திகதியன்று நிறைவேற்றப்பட்ட தீமானத்தை மேல் மாகாண முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், பொருளாதார ஊக்குவிப்பு, மின்சாரம் மற்றும் எரிசக்தி, சுற்றுச்சூழல், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இசுர தேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 1946 ஆம் ஆண்டின் பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் பிரகாரம் எனக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் இத்தால் அறிவிக்கிறேன்.*

*இசுர தேவப்பிரிய,*
*முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை,*
*நீதி மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,*
*பொருளாதார அபிவிருத்தி, மின் சக்தி மற்றும் எரி சக்தி, சுற்றாடல்*
*அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு*
*மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்.*

*இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2019, ஏப்பிறல் 18.*

*06-317*

## மேல் மாகாண மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, குறித்த கேளிக்கை வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காக அறவிடப்படுகின்ற உள்நுழைவுக் கட்டணத்தில் இருந்து 10% ஆன கேளிக்கை வரி விதிக்கப்பட்டு அறவிடுவதற்கு 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க குறித்த கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி நீர்கொழும்பு மாநகர சபை மூலம் 2018.12.11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆலோசனையை மேல் மாகாண கௌரவ பிரதான அமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், நீதி மற்றும் சமாதானம், காணிகள், கல்வி, உள்ளூராட்சி மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம், வர்த்தக, மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனித ஆற்றல் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு தொடர்பான அமைச்சரான இசுர தேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க குறித்த மாகாண சபை (துணைச் சட்டவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் அதிகாரத்திற்கு ஏற்புடையதான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க குறித்த கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் அதிகார விதிகளின்படி என்னிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அனுமதிக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

இசுர தேவப்பிரிய,
முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை,
நீதி மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
பொருளாதார அபிவிருத்தி, மின் சக்தி மற்றும் எரி சக்தி, சுற்றாடல்
அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு
மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான அமைச்சர்.

இல. *204*, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
*2019*, ஏப்பிறல் *18*.

*06-318*